Budget 2021–22

# ஆஸ்திரேலியாவின் மீட்சியை உறுதிப்படுத்துதல்



‘கோவிட்-19’ -இல் இருந்து ஆஸ்திரேலியா சிறப்பாக மீண்டுவந்துகொண்டிருக்கிறது

## நமது மீள்வரவு

பெரும்பான்மையான மற்ற நாடுகளை விட மிகக் குறைவான நோய்த்-தொற்றுகளும், மருத்துவமனை அனுமதிப்புகளும் மரணங்களுமே ஆஸ்திரேலியாவில் ஏற்பட்டுள்ளதை வைத்துப் பார்க்கும்போது, ‘கோவிட்-19’-ஐ எதிர்கொண்ட ஆஸ்திரேலியா சாதித்துள்ள பலாபலன்கள் உலகில் முன்னணி வகிப்பவையாகும்.

ஏறத்தாழ கடந்த 30 ஆண்டுகளில் ஏற்பட்ட ஆஸ்திரேலியாவின் முதல் பொருளாதாரப் பின்னடைவில் அரசாங்கத்தின் அவசரகால ஆதரவுதவிகள் பொருளாதாரத்திற்கு ஒரு அவசியமான உயிர்காப்பு இணைப்பாக இருந்தன.

பொருளாதாரம் வலுவாக மீண்டெழுந்துள்ளது, மற்றும் கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் எதிர்பார்த்ததை விட ஒன்பது மாதங்களுக்கு முன்பாகவே பெருந்தொற்றுக் காலத்திற்கு முன்பிருந்த அளவுகளுக்கு அது திரும்பவிருக்கிறது, அத்துடன் வேலையில்லா நிலையின் மீட்சியானது 1990-களின் பொருளாதாரப் பின்னடைவு காலத்தில் இருந்ததை விட 5 மடங்குகள் அதி-விரைவாக மீளவிருக்கிறது.

பெருந்தொற்றிலிருந்து நாம் இன்னும் முற்றிலுமாக விடுபடவில்லை எனும் அதே வேளையில், வரவிருக்கும் பொருளாதார சவால்களை உலகிலுள்ள மற்ற நாடுகளை விட அதி சிறப்பாய் எதிர்கொள்ளும் நிலையில் நாம் இருக்கிறோம்.

ஆஸ்திரேலியாவின் மீட்சியை உறுதிப்படுத்துவதற்காக, இந்த வெற்றியை அடித்தளமாகக் கொண்டு இந்த வரவு-செலவுத் திட்டம் அமைகிறது.

## நமது திட்டம்

ஆஸ்திரேலியாவின் மீட்சியை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட அரசினது பொருளாதாரத் திட்டத்தின் அடுத்த கட்டமே இந்த வரவு-செலவுத் திட்டமாகும்.

இது வேலைகளை உருவாக்கும், அத்தியாவசிய சேவைகளுக்கு உத்திரவாதம் அளிக்கும், மற்றும் அதி மீண்டெழு-திறன் கொண்ட அதி பாதுகாப்பான ஆஸ்திரேலியாவினைக் கட்டியெழுப்பும்.

இத் திட்டமானது பின்வரும் வழிகளில் இதைச் செய்யும்:

- தனி-நபர் வருமான வரி வெட்டுகள்;
- வர்த்தக வரி ஊக்கத்தொகைகள்;
- புதிய தொழில்-பழகுநர்-பயிற்சிகள் மற்றும் பயிற்சித் தலங்கள்;
- இன்னும் அதியளவு உள்கட்டுமானங்கள்; மற்றும்
- பாடசாலைகள், மருத்துவமனைகள், முதியோர் பராமரிப்பு, மன-நல சேவைகள் மற்றும் NDIS -இற்கான வரலாறு காணா நிதியுதவி.

இது ஆஸ்திரேலியாவின் மீட்சியை உறுதிப்படுத்தி, வேலையின்மையின் வீதத்தை வெகுவாய்க் குறைக்கும்.

### வேலைகளை உருவாக்குதல் மற்றும் நமது பொருளாதாரத்தினை மீள்கட்டுமானம் செய்தல்

- குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர-வருமானம் ஈட்டுவோருக்குக் கூடுதலாக ஒரு 7.8 பில்லியன் டாலர் வரி வெட்டுகள் – இது தனி-நபர்களுக்கு *$1,080* மற்றும் இரட்டை வருமான சோடிகளுக்கு *$2,160* மதிப்புள்ளதாக இருக்கும்
- வர்த்தக முதலீடுகளுக்கு ஆதரவளிக்கவும் வேலைகளை உருவாக்கவுமென கூடுதலாக ஒரு 20.7 பில்லியன் டாலர்களை வரவிருக்கும் நிதியாண்டுகளில் வரி நிவாரணமாக அளிப்பதற்காக 'தற்காலிக முழுச்-செலவுகளுக்கான வரிக் கழிப்பு' (temporary full expensing) மற்றும் 'தற்காலிக நஷ்டப்-பின்னெடுப்பு' (temporary loss carry-back) ஆகிய வசதிகளை நீட்டித்தல்
- உள்கட்டுமான செயல் திட்டங்களுக்கான நிதியாக பத்து ஆண்டு காலத்தில் கூடுதலாக ஒரு 15.2 பில்லியன் டாலர்கள்
- 'ஹோம்-பில்டர்' திட்டத்தின் கீழ் வீடு கட்டும் பணியைத் துவங்குவதற்கான காலத்தையும், 'நியூ ஹோம் கியாரண்ட்டி' திட்டத்தையும் நீட்டித்தல்
- ஆஸ்திரேலியாவின் கணினி-மயப் பொருளாதாரத்தினை வளர்க்கத் தேவைப்படும் சூழல்கள் மற்றும் திறன்களில் முதலீடு செய்தல்
- விமானத்-துறை மற்றும் சுற்றுலாத் துறைகளுக்கு ஆதரவளிப்பதற்கான 1.2 பில்லியன் டாலர்கள் உள்ளடங்க, ஆகக் கடுமையாய்ப் பாதிக்கப்பட்டுள்ள நமது துறைகளுக்கும், பிராந்தியங்களுக்கும் ஆதரவுதவியளித்தல்

### அத்தியாவசிய சேவைகளுக்கு உத்திரவாதம் அளித்தல்

- 'கோவிட்-19' சுகாதார பதில் நடவடிக்கைகளை நீட்டித்தல் மற்றும் 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தளிப்புத் திட்டத்தில் மேலும் முதலீடு செய்வதன் மூலம் ஆஸ்திரேலியர்களது உடல் நலனைப் பாதுகாத்தல்
- கூடுதலாக ஒரு 13.2 பில்லியன் டாலர்களுடன் NDIS திட்டத்திற்கு முழு நிதியுதவி அளிப்பதன் மூலம்

இயலாமை உள்ளவர்களுக்கு ஆதரவுதவியளித்தல்

- வயதான ஆஸ்திரேலியர்கள் மரியாதை, பராமரிப்பு மற்றும் கௌரவத்துடன் நடத்தப்படுவதை உறுதிப்படுத்த முதியோர் பராமரிப்பு சீர்திருத்தங்களுக்கு நிதியுதவியாக 17.7 பில்லியன் டாலர்களை அளித்தல்
- மேம்படுத்தப்பட்ட மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட மன-நலப் பராமரிப்பு மற்றும் தற்கொலைத் தடுப்புப் பணிகளுக்கென 2.3 மில்லியன் டாலர்கள்
- நமது பாலர்-பள்ளிகளில் முதலீடு செய்தல்

### பெண்கள் பாதுகாப்பையும் அவர்களது பொருளாதாரப் பாதுகாப்பையும் மேம்படுத்துதல்

- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை மீது கவனம் செலுத்துதல்
- ஆஸ்திரேலிய வேலைத்தலங்களில் பாலியல் அலைக்கழிப்பு இல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்துதல்
- பெண்களுக்கான சுகாதார சேவைகளை அடையும் வசதிகளையும், அவற்றின் தரத்தினையும் மேம்படுத்துதல்
- குழந்தைப் பராமரிப்பு சேவைகளைப் பெறுவதற்கான இயலுமை, வேலைவாய்ப்புகளில் உதவி மற்றும் மகளிர் நிதிநிலைப் பாதுகாப்பு ஆகியவற்றினை மேம்படுத்தி பெண்களது பொருளாதாரப் பாதுகாப்பிற்கு வலுவூட்டல்

### அதி மீண்டெழு திறனும், பாதுகாப்பும் மிக்க அஸ்திரேலியாவினைக் கட்டியெழுப்பல்

- நமது தேசியப் பாதுகாப்பு மற்றும் சட்ட அமலாக்க வல்லமைகளில் முதலீடு செய்து ஆஸ்திரேலிய மக்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்
- 2030-ஆம் ஆண்டில் வேளாண்மைத் தொழில் மூலமான உற்பத்திகளின் பண்ணை-விலை மதிப்பினை 100 பில்லியன் டாலர்களாக உயர்த்தவேண்டும் என்ற வேளாண்மைத் தொழிலின் இலக்கினைச் சாதிக்க உதவுதல்
- மின்சாரம், எரிவாயு போன்ற ஆற்றல்கள் கட்டுபடியாகும் விலைகளில் கிடைக்குமாறு செய்தல், அவற்றின் கிடைப்பு உறுதிப்படுத்தப்படல் மற்றும் அவற்றை நம்பத்தக்கவையாக இருக்குமாறு வைத்திருத்தல்
- மருத்துவ மற்றும் உயிரியல்-நுட்பப் புதினங்களை விரைவுபடுத்துதல்
- நமது பிராந்தியங்களிலுள்ள செரிவாற்றல்களை வெளிக்கொணரல்
- இயற்கை அழிவுகளால் பாதிக்கப்படும் சமூகங்களுக்கு ஆதரவுதவியளித்தல்